# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**U.G.** DEGREE EXAMINATION – **ALLIED**

FOURTH SEMESTER – **APRIL 2023**

## UTL 4401 – TRANSLATION

Date: 04-05-2023 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00 AM - 12:00 NOON

| | |
|---|---|
| | **பகுதி அ - K1 (CO1)** |
| | **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. (10 x 1 = 10)** |
| 1. | **ஓரிரு சொற்களில் விடையளிக்க.** |
| அ | கணிப்பொறி மொழிபெயர்ப்பில் சம்பந்தப்பட்டுள்ள துறைகள் எத்தனை? |
| ஆ | முறைசார் நிகரன் தவிர்த்த மற்றொரு மொழிபெயர்ப்பு நிகரன் யாது? |
| இ | புதிய சொற்கள் படைப்பதை எங்ஙனம் அழைக்கலாம்? |
| ஈ | மொழிக்கும், மக்களுக்கும், மனிதத்திற்கும் ஆக்கம் சேர்ப்பவன் யார்? |
| உ | இணையதள மொழிபெயர்ப்புப் பக்கங்களில் ஏதேனும் ஒன்றின் பெயர் கூறுக. |
| 2. | **கோடிட்ட இடத்தை நிரப்புக.** |
| அ | எதிரெதிர்க் கோட்பாடுகளில் மொத்தம் _______ எதிரெதிர் இணைகள் உள்ளன. |
| ஆ | பச்சைத் தண்ணீர் என்பதை ஆங்கிலத்தில் _______ என்கிறோம். |
| இ | வெகுண்டான் என்பது _______ கோபத்தைக் குறிக்கும். |
| ஈ | மொழிபெயர்ப்பில் மாணவர்கள் கவனிக்க வேண்டியவை பொருள், _______ ஆகும். |
| உ | கடைத்தேங்காயை எடுத்து _______ உடைக்காதே. |
| | **பகுதி அ – K2 (CO1)** |
| | **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. (10 x 1 = 10)** |
| 3. | **பொருத்துக.** |
| அ | Uncle - அஞ்சல்வழிக் கல்வி |
| ஆ | Idioms - சித்தப்பா |
| இ | Man - வலைத்தளம் |
| ஈ | Correspondence Course - சிறப்பு வழக்குகள் |
| உ | Website - Manly |
| 4. | ***சரியா ? தவ□ா?*** |
| அ | அறிவியல் மொழிபெயர்ப்பில் சொல்லப்படும் செய்திக்கு முக்கியத்துவமுண்டு. |
| ஆ | ஆங்கிலத்தில் அமைந்துள்ள மொத்தக் காலப்பிரிவுகள் மூன்று. |
| இ | மொழிபெயர்ப்பு மூன்று படிநிலைகளைக் கொண்டுள்ளது. |
| ஈ | கோழிக்குட்டி என்பது மரபுப்பிழையோடு கூடிய மொழிபெயர்ப்பு. |
| உ | Co-passenger என்பதை உடன்போகியவர் என்று மொழிபெயர்க்கலாம். |
| | **பகுதி ஆ – K3 (CO2)** |
| | **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு *100* சொற்களில் விடையளிக்க. (2 x 10 = 20)** |
| 5. | மொழிபெயர்ப்பின் இன்றியமையாமை குறித்து நீர் அறிந்தனவற்றை எடுத்துரைக்க. |
| 6. | கவிதை, நாடகம், சொற்பொழிவு, கதைகள் குறித்த இலக்கிய மொழிபெயர்ப்பு குறித்துத் தொகுத்துரைக்க. |
| 7. | மொழிபெயர்ப்பின் முப்பணிகள் எவையென்பதையும், நிலையான நிகரன்கள் குறித்தும் சிறு கட்டுரைக்க. |
| 8. | பின்வரும் உரையாடலைத் தமிழில் மொழிபெயர்க்க.<br>Dr : Balu, what is your trouble?<br>Balu: I am down with fever Doctor |

| | |
|---|---|
| | Dr : How long have you been suffering?<br>Balu: For the past two days<br>Dr : Did you try any medicine?<br>Balu: No. I didn't try any.<br>Dr : Take this medicine and we'll see.<br>Balu: Shall I come tomorrow?<br>Dr : Yes, if you still have the trouble. |
| **பகுதி இ – K4 (CO3)** | |
| | **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு *100* சொற்களில் விடையளிக்க. (2 x 10 = 20)** |
| 9. | ஒருபொருட்பன்மொழி (Synonym) குறித்து டாக்டர் சேதுமணி மணியன் கூறுவனவற்றை ஆய்ந்துரைக்க. |
| 10. | பின்வரும் பழமொழிகளைத் தமிழில் மொழிபெயர்க்க.<br>i. Face is the index of the mind<br>ii. Too much of anything is good for nothing<br>iii. Time and tide wait for no man<br>iv. Little strokes fell great oaks<br>v. God stays long, but strikes at last |
| 11. | இளம் மொழிபெயர்ப்பாளனுக்குத் தேவையான அறிவுரைகளை விளக்குக. |
| 12. | நும்மைப் பற்றிய ஒரு தன்விவரக் குறிப்பைப் பத்து வாக்கியங்களாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தவறின்றித் தருக. |
| **பகுதி ஈ – K5 (CO4)** | |
| | **ஏதேனும் ஒரு வினாவிற்கு *250* சொற்களில் விடையளிக்க. (1 x 20 = 20)** |
| 13. | மொழிபெயர்ப்பு எனில் என்னவென்பதற்கு மேனாட்டார் தரும் விளக்கங்கள் குறித்தும், மொழிபெயர்ப்பின் கோட்பாடுகள் குறித்தும் கட்டுரைக்க. |
| 14. | 'ஆங்கிலம்-தமிழ்' இலக்கண முறையில் ஆங்கிலத்தின் பன்னிரண்டு காலப்பிரிவுகள் குறித்து ஆசிரியர் கூறியுள்ளவற்றைச் சான்றுகளுடன் விவரிக்க. |
| **பகுதி உ – K6 (CO5)** | |
| | **ஏதேனும் ஒரு வினாவிற்கு *250* சொற்களில் விடையளிக்க. (1 x 20 = 20)** |
| 15. | சொல்லாக்கத்தில் 'புதுமையாக்கம்' குறித்து கட்டுரைக்க. |
| 16. | பின்வரும் தமிழ்க்கதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க.<br>ஓர் அறையில் நான்கு மெழுகுவர்த்திகள் எரிந்து கொண்டிருந்தன. மெலிதாய்க் காற்று வீசியது. 'அமைதி' என்ற முதல் மெழுகுவர்த்தி, 'காற்று அடிக்கிறதே, நான் அணையப் போகிறேன்' என்றது. அணைந்தும் போனது. 'அன்பு' எனும் இரண்டாம் மெழுகுவர்த்தியும் காற்றைக் கண்டு பயந்தது. அதுவும் அணைந்து போனது. 'அறிவு' எனும் மூன்றாம் மெழுகுவர்த்தியும் மற்ற இரண்டு மெழுகுவர்த்திகளைப் போலவே காற்றை எதிர்க்கும் துணிவு இல்லாமல் அணைந்து போனது. ஆனால், நான்காம் மெழுகுவர்த்தி மட்டும் காற்றை எதிர்த்து நின்றது. இறுதியில், அது மட்டும் அணையாமல் எரிந்து கொண்டே இருந்தது. அந்நேரத்தில் அந்த அறைக்குள் ஒரு சிறுவன் நுழைந்தான். அணைந்து போயிருந்த மெழுகுவர்த்திகளைக் கண்டு மனம் வருந்தினான். எரிந்து கொண்டிருந்த நான்காம் மெழுகுவர்த்தியிடம் சென்று மற்ற மூன்றும் அணைந்து விட்டனவே என வருந்தினான். அதற்கு அந்த மெழுகுவர்த்தி, 'பரவாயில்லை, என்னை வைத்து மற்ற மூன்று மெழுகுவர்த்திகளையும் ஏற்றி விடு' என்றது. அதைக் கேட்டு மகிழ்ந்த அந்தச சிறுவன் அந்த நான்காம் மெழுகுவர்த்தியைப் பார்த்து, 'உன் பெயர் என்ன?' என்று கேட்டான். அதற்கு அந்த மெழுகுவர்த்தி, 'என் பெயர் நம்பிக்கை' என்றதுு. |

---------------------------